**செய்தி வெளியீடு எண்:258** **நாள்: 09.05.2013**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று **(9.5.2013)** தலைமைச் செயலகத்தில், பள்ளிக் கல்வித் துறையில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான **394** பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள். மேலும், ஆசிரியர் தகுதித் தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட்ட **34** நபர்களுக்கு பட்டதாரி ஆசிரியர்களுக்கான பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

பள்ளிக் கல்வித் துறையில் பணிபுரிந்து, பணிக்காலத்தில் காலமான ஆசிரியர்கள், நூலகர்கள், அமைச்சுப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு, கருணை அடிப்படையில், இளநிலை உதவியாளர் பணிக்கான பணி நியமன ஆணை **388** நபர்களுக்கும், மூன்றாம் நிலை நூலகர்கள் பணிக்கான பணி நியமன ஆணை **6** நபர்களுக்கும், என மொத்தம் **394** வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று வழங்கினார்கள்.

மேலும், ஆசிரியர் தகுதித் தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட்ட **34** நபர்களுக்கு சிறுபான்மை மொழிகளான தெலுங்கு, உருது மற்றும் அம்மொழிகளில் கணிதம், வரலாறு ஆகிய பாடங்களுக்கான பட்டதாரி ஆசிரியர் பணிநியமன ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து பணிநியமன ஆணைகளைப் பெற்றுக் கொண்ட வாரிசுதாரர்கள் மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை–**9.**
நாள்: 9.5.2013